**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.IV, திருப்பூர்.**
முன்னிலை: திரு.V.லோகநாதன், B.A., LLB.,
நீதித்துறை நடுவர் எண்.4, திருப்பூர்.

(2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் நாள் திங்கட்கிழமை)

Crl.M.P. No.3352/2026

CNR No.TNTI1A0087672026

S.ராஜா, ...மனுதாரர்/ மனுச்சொத்தின் உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக,
காவல் ஆய்வாளர் அவர்கள்,
மத்திய குற்றப்பிரிவு காவல் நிலையம்,
திருப்பூர். ...எதிர்மனுதாரர்
(குற்ற எண் 4/2023)

இம்மனுவானது 04.08.2026 ம் தேதியன்று, இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.செல்லப்பாண்டி அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து பூர்வமான ஆட்சேபனையை பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று 17.08.2026 ம் தேதி இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

1. திருப்பூர் மத்திய குற்றப்பிரிவு காவல் நிலைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.479/2024 குற்ற எண்.4/2023, இதச பிரிவு 420, 406-ன் கீழான வழக்கில் மனுதாரர்/எதிரி மாண்புமிகு திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை கோரியபோது ரூ.9,50,000/- திரும்ப பெற்றுக்கொள்ளக்கூடிய (Refundable) தொகையாக இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்பட்டதால் மனுதாரர்/எதிரி பணம் ரூ.9,50,000/-ஐ இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார். மேற்படி வழக்கில் கடந்த 16.10.2025 ம் தேதி மனுதாரர்/எதிரி விடுதலை செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் மனுதாரர்/எதிரி இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பணம் ரூ.9,50,000/- திரும்ப

பெற்றுக்கொள்ளக்கூடிய (Refundable) தொகையை மனுதாரர் தன்னிடம் ஒப்படைக்குமாறு மனுதாரர் இந்நீதிமன்றத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. திருப்பூர் மத்திய குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண்.4/2023, இதச பிரிவு 420, 406–ன் கீழான ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.479/2024 தேதி 16.10.2025 வழக்கில் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி / மனுதாரர் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.479/2024 குற்ற எண்.4/2023, இதச பிரிவு 420, 406–ன் கீழான வழக்கில் இருந்து கடந்த 16.10.2025 ம் தேதி விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி தீர்ப்பினை ஆட்சேபித்து அரசுதரப்பில் எவ்வித மேல்முறையீடு இதுநாள் வரை செய்யப்படவில்லை என்பதும், மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இல்லை என்பதும் தெரிய வருகிறது. அதனால் மனுதாரர்/எதிரி இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள திரும்ப பெற்றுக்கொள்ளக்கூடிய (Refundable) தொகையான ரூ.9,50,000/– ஐ மனுதாரர்/எதிரி திரும்ப பெறுவதற்கு உரிமையுடையவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனால் மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள இம்மனு நீதியின்பால் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

4. முடிவாக மனுதாரர்/ எதிரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ம் நாள் திங்கட்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VELLINGIRI LOGANATHAN

Digitally signed by VELLINGIRI LOGANATHAN
Date: 2026.08.17 20:01:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.4,
திருப்பூர்.